# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 89/2018 Date:19.08.2025**

**(DW1)- ஜெபராஜ்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1.**வாதி சபை பதிவு பெற்ற நிறுவனம் என்றால் சரிதான். அதன் பதிவு பெற்ற அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. வாதி அறக்கட்டளை பாஸ்டர் சாம்சன் காலத்தில் நடந்து கொண்டிருந்தது என்பதையும் அதை தொடர்ந்து நடந்தது என்பதை காட்டும் செயலர் அறிக்கை என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை, வாதியால் திருடப்பட்டது. பாஸ்டர் சாம்சன் காலத்தில் பாதுகாத்து எழுதப்பட்ட நிதி அறிக்கை புத்தகம் என்னிடம் உள்ளதா என்றால் சரிதான், 2015 ம் காலக்கட்டத்தில் இருந்து உள்ளது. மேற்படி ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

**2.** ஒருவரை அறக்கட்டளை தலைவரை நியமிக்க பாஸ்டர் சாம்சனுக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல. வாதி அறக்கட்டளைக்கு சட்ட திட்டங்கள் உண்டு என்றால் சரிதான். ஒருவர் அறக்கட்டளை ஆட்சி மன்ற குழுவில் உறுப்பினராக இருந்தால் தான் அறக்கட்டளை தலைவராக நியமிக்க முடியும் என்றால் சரியல்ல. ஒரு அறக்கட்டளை தலைவராக நியமிக்க பட வேண்டுமென்றால் அவர் அறக்கட்டளை உறுப்பினராக இருக்க வேண்டாம் என்றால் சரிதான். அறக்கட்டளை ஆட்சி மன்ற குழுவின் அனுமதியும் தேவையில்லையென்றால் சரிதான்.

**3.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அறக்கட்டளை விதிகளின் பதிவு ஆவணம் என்றால் சரிதான். ஊழியம் செய்யும் நபர்கள் மற்றும் பார்வையாளர்களை ஆட்சி மன்ற குழுவின் அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அறக்கட்டளை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறக்கட்டளை தலைவர் மறித்தாலோ ராஜினாமா செய்தாலோபதவியை விட்டு விலக்கப்பட்டாலோ அந்த இடத்தில் ஆட்சி குழுவில் இருந்து தகுதியான ஒரு நபரை அறக்கட்டளை தலைவராக நியமிப்பர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அதற்கு வேறு தீர்வு உள்ளது.

**4.** நான் ஆட்சி மன்ற குழுவின் உறுப்பினராகவோ அல்ல ஆட்சி மன்ற குழுவால் அறக்கட்டளையின் உறுப்பினராகவோ அல்லது ஆட்சி மன்ற குழுவால் அறக்கட்டளை தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் ஆட்சி மன்ற குழுவின் அனுமதி வேண்டும் என்றால் சரியல்ல. அறக்கட்டளை தலைவராக உள்ள ஒரு நபர் வேறு நபரை அறக்கட்டளை தலைவராக ஆட்சி மன்ற குழுவின் அனுமதியின்றி தன்னிச்சையாக நியமிக்க முடியாது என்றால் சரியல்ல. அறக்கட்டளை தலைவர் பதவியிலிருந்து ஒருவரை நீக்கவும் நியமிக்கவும் ஆட்சி மன்ற குழுவிற்கு மட்டுமே உரிமையுண்டு தவிர வேறு யாருக்கும் அதிகாரமில்லையென்றால் சரியல்ல.

**5.** நான் பட்டிகை சொத்துகளை என்னுடைய பெயரில் பெயர் மாற்றம் செய்து பட்டா பெற்று தீர்வை செலுத்தி வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுதி கொடுத்த உயில் பத்திரத்தில் பாஸ்டர் சாம்சன் மற்றும் அவரது தாயார் இறப்பிற்கு பின்பு தான் மேற்படி உயில் பத்திரம் நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, பாஸ்டர் சாம்சன் இறப்பிற்கு பின்பு நடைமுறைக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய அறக்கட்டளை சட்ட விதிகளின் படி ஒரு நபர் மேல் உயில் பத்திரம் எழுதி வைப்பதாக இருந்தால் அவரின் இறப்பிற்கு பின்பு தான் உயில் செயல்பாட்டிற்கு வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**6.** நான் பாஸ்டர் சாம்சனின் தாயர் இறப்பிற்கு முன்பே பட்டிகை சொத்திற்கு பட்டா பெற்று தீர்வை செலுத்தி விட்டேன் என்றால் சரிதான். எனவே இந்திய அறக்ககட்டளை சட்டப்படி பாஸ்டர் சாம்சனின் தாயர் இறப்பிற்கு முன்பே பட்டிகை சொத்திற்கு பட்டா பெற்று தீர்வை செலுத்தி உள்ளதால் பட்டிகை சொத்தின் மேல் எந்த உரிமையும் எனக்கு ஏற்படாது என்றால் சரியல்ல. அறக்கட்டளை எனக்கு கொடுக்கப்பட்ட உயில் பத்திரத்தில் பட்டிகை சொத்து எனக்கு உரிமைப்பட்டது என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான், ஐக்கிய தெய்வசபைக்காக ஜெபராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**7.** பட்டிகை சொத்துகளை நிர்வகிக்கும் பொறுப்பு தான் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர அதன் உரிமை எனக்கு கொடுக்கப்படவில்லையென்றால் சரியல்ல. பட்டிகை சொத்திற்கான பட்டா மற்றும் தீர்வை ரசீதுகளில் உரிமையாளராக ஐக்கிய தெய்வசபை பெயர் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். நான் கூறுவது போல் உயிலில் எனக்கு தனிப்பட்ட எந்த உரிமையும் கொடுத்ததாக குறிப்பிடப்படவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன்

என்றாலும் சரியல்ல. வாதி அறக்கட்டளையின் சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பாஸ்டர் சாம்சனை சுவாதீனப்படுத்தி நோயினால் பாதிக்கப்பட்டு அவர் இயலாமையில் இருந்த காலத்தில் அவராகவே பதிவு அலுவலகத்திற்கு வர முடியாத சூழ்நிலையில் இருந்த போது நான் பதிவு அலுவலக அதிகாரிகளை அழைத்து சென்று பாஸ்டர் சாம்சன் மற்றும் அவரது தாயாரை நிர்ப்பந்தப்படுத்தி எழுதிய ஆவணம் தான் பிவாசாஆ. 7 மற்றும் பிவாசாஆ. 8 என்றால் சரியல்ல.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்